செ.வெ.எண்.26 நாள்.08.04.2017

# பத்திரிக்கைச்செய்தி

அரசாணை எண்.1 மற்றும் 50 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VIII) துறை நாள்:03.01.12 மற்றும் 29.10.2012 மற்றும் சென்னை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயம் அவர்களின் கடித எண்.P&E2(1) 129/2017 நாள்:03.04.2017 மற்றும் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் 1981-ன்படி **09.04.2017 (மஹாவீர் ஜெயந்தி தினம்)** அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தால்(டாஸ்மாக்) நடத்தப்படும் மதுபான கடைகள் அவற்றுடன் இணைந்த மதுபானக் கூடங்கள், கிளப்புடன் இணைந்த FL2 உரிமங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுடன் இணைந்த FL3, FL3A & FL3AA) உரிமம் பெற்ற மதுபானக் கூடங்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் நிர்வாகம் நடத்தி வரும் அனைத்து மதுபான கடைகள் அவற்றுடன் இணைந்த மதுபான கூடங்கள் மற்றும் FL3 உரிமம், FL3A உரிமதலத்தில் கண்ட மதுபானக் கூடங்கள் ஆகியவைகள் **09.04.2017** அன்று மூடப்பட்டு இருக்கும். மேற்படி உரிம தலத்தில் மதுபானங்கள் விற்பனை கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், மேற்படி நாளில் சட்ட விரோதமாக எவ்விடத்திலும் மதுபானங்கள் விற்பனை மற்றும் மதுபானங்கள் கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டால் காவல் துறை மூலம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.